சாதனைகளை மறுத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு பதிலடியாக இருக்கும் என்பதால், அப்படி துறை விளம்பரப்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கோரிக்கை வரும் என்பதற்காகவே ஆதிதிராவிட நலத் துறை, இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு செய்திருக்கிற சாதனைகள், செய்ய இருக்கிற சாதனைகள் பட்டியல் ஒரு புத்தக வடிவிலே மானியக் கோரிக்கை தினத்தன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 539, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

539—

பிளவக்கல் அணைப் பகுதியை மேம்படுத்துதல்

*78854—**திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதியில் மாவட்ட சுற்றுலா மையமான பிளவக்கல் அணைப் பகுதியை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணைப் பகுதி மாவட்ட சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டு அடிப்படை வசதிக்காக ரூ.2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணை, கோவிலாறு அணை என்று இரு அணைகள்

1995 மே 3]

இருக்கின்றன. 1984-85ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.2.5 இலட்சம் ஒதுக்கப்பட்டது. மாவட்ட டூரிஸ்ட் மையத்திற்கு. அதற்குப் பிறகு ரூபாய் ஒதுக்கவில்லை. இந்த ரூபாய் முள் வெட்டகூட பத்தாது. அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து போகிறார்கள். அரசு முத்திரைச் சின்னமான கோபுரத்தை உடைய ஸ்ரீ ஆண்டாள் கோவில் அங்கே இருக்கிறது. அங்கே வந்துவிட்டு, நேரே டேமுக்குத்தான் போகிறார்கள். ஆகவே, இந்த மாவட்டச் சுற்றுலா மையத்தை மாநிலச் சுற்றுலா மையமாக்குவதற்கும், கலை அழகுள்ள சிற்பங்களை அதிகமாக வைப்பதற்கும், பூந்தோட்டம், ஓட்டல் இன்னும் தங்கும் விடுதி அமைப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க தமிழக அரசு சிபாரிசு செய்து, மத்திய அரசிடமிருந்து நிதியை வாங்கி, தமிழக அரசும் மத்திய அரசும் அதிகமாக ரூபாய் ஒதுக்கீடு செய்து, இதை மேம்படுத்த அரசு திட்டம் வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், நமது அன்னை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றபின்புதான் இப்படிப்பட்ட மாவட்ட உலா ஸ்தலங்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலமும், மாவட்ட போக்குவரத்துக்கழகம் மூலமும், சுற்றுலாத்துறை 2 இலட்சம் கொடுத்து, அந்த அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கிறது. எனவே 1984-85ஆம் ஆண்டு அங்கே 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்து கொடுத்திருக்கிறார். இங்கே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் அதை மாநிலச் சுற்றுலா மையமாக அறிவிக்க முடியுமா என்று கேட்டார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணையைப் பொறுத்தவரையில் வார விடுமுறை நாட்களில்தான் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். எனவே, அங்கே வருகிற சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கோடு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் கடந்த காலத்திலே ஒதுக்கப்பட்ட சுற்றுலாத்துறை நிதிக்கும் அதிகமாக இப்போது சிறப்பு நிதியாக 1 லட்சம் ரூபாயை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளை அந்த மாவட்ட நிர்வாகம் மூலம் மேற்கொள்ள சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[1995 மே 3

முற்பகல் 11-05

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சுற்றுலா மையத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு அந்த அணையில் படகுகள் இல்லை. ஏற்கெனவே அந்த இரண்டு அணைகளிலும் விசைப்படகுகள் இருந்தன. இப்போது இல்லை. ஆனால் சுற்றுலாப் பயணிகளிடம் பணம் வசூலிக்கிறார்கள். அந்த வசூலை வைத்தாவது அங்கே பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளலாம். ஒன்றுமே செய்யமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, ஒரு லட்சம் ரூபாய் எப்படிப் போதும்? மத்திய சர்க்காரிடம் கேட்டு மாநில சர்க்கார் அதிக ரூபாயைப் பெற்று அங்கே சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்துகிற அளவில் நீங்கள் செய்யவேண்டும். இப்போது பி.ஆர்.சி. கழகத்தில் சிலவற்றைச் செய்கிறார்கள். ஏ.பி.டி.யும் உதவி செய்கிறார்கள். பொதுப்பணித்துறையிலிருந்து பராமரிக்கிறார்கள். பொதுப்பணித்துறையில் ரோடு சரியில்லை என்று 8 லட்சத்தில் எஸ்டிமேட் போட்டு வைத்திருக்கிறார்கள். கலெக்டரேட் மட்டும் அவர்கள் நிதியை வைத்து செய்கிறார்கள். சுற்றுலாத் துறையிலிருந்து மாநில சர்க்கார் செய்யவேண்டும். அதைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துவக்கவேண்டும். தேக்கடி மாதிரி அந்த இடத்தில் யானைக் கூட்டம், மான் கூட்டம், கரு மந்திக் கூட்டம் எல்லாம் இருக்கின்றன. ஆகவே அங்கே 2 விசைப் படகுகளை விட ஏற்பாடுகளை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளவைக்கல் அணையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 1984-85ல் அரசு 2 லட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறது. அங்கே வார விடுமுறை நாட்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தால் சிறப்பு நேர்வாகக் கருதி, சுற்றுலாத்துறை மேலும் 1 லட்ச ரூபாயும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட நிர்வாகம், மற்றும் மாவட்ட போக்குவரத்துக் கழகம் மூலம் ஏனைய வசதிகளுக்காக அதிகப் பணமும் ஒதுக்கப்படுகிறது. எதிர்காலத்தில், அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க துறை நடவடிக்கை எடுக்கும். பிளவைக்கல்லைப் பொறுத்தவரையில் சுற்றுலாத்துறை மூலம் அங்கே படகுக் குழாம் இல்லை. எனவே அதுபோன்ற வாய்ப்பு இருக்குமானால், அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதை எதிர்காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.